**2026 மார்ச் மாதம் 24– ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 108/2024**

O.S. No.: 108/2024 – நாகராஜன் PW2 24.03.2026

த/பெ.சந்தானம்

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் வாதி சொல்லி தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்து வழக்கு ஆகும். வாதிகளுக்கும், வாதியின் தந்தை ராஜாங்கம் அவர்களுக்கும் பிரதிவாதி வேண்டிய உதவிகளை செய்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1, 2 வாதிகளின் தந்தை போதை பழக்கத்திற்கு அடிமையாகி, எனது பெரியப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

2. 1, 2 வாதிகளின் தந்தை ராஜாராம் அவரது தம்பிகளுடன் குடித்துவிட்டு சண்டை போடுவார் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் பிரதிவாதிகள் ராஜாராமுக்கு பண உதவி செய்து வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது வீட்டின் அருகில் உள்ளது என்றால் சரிதான். எனது பெரியப்பா வீராச்சாமி இறந்த பின்பு அவரது மனைவியையும், ராஜாராமின் பிள்ளைகளும் பிரதிவாதி நல்ல முறையில் பார்த்து வந்தார் என்றால் சரிதான்.

3. தாவா சொத்தில் யாரும் வசித்து வரவில்லை என்றால் சரியல்ல, எனது அண்ணன் பிள்ளைகள், அண்ணி ஆகியோர் வசித்து

வருகிறார்கள். தாவா வீடு எனது பெரியப்பா வீராச்சாமி என்பவர் ஜான்சிராணி என்பவருக்கு உயில் சாசனம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, அவர் இறந்த பின்னர் 1 ½ வருடங்கள் கழித்து நான் தெரிந்து கொண்டேன். உயில் சாசனப்படி பிரதிவாதிகள் தாவா வீட்டை அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது.

4. வாதிகள் தாவா வீட்டின் ஒரு பகுதியில் வசித்து வருகிறார்கள் என்றாலும், பிரதிவாதி அவ்வப்போது வந்து செல்வார்கள் என்றால் எனது அண்ணன் உயிருடன் இருக்கும்வரை ஜான்சிராணி வந்து சென்றார். வாதிக் கேட்டுக்கொண்டதன்படி நான் தவறான தகவலுடன் நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 24.03.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.25 17:34:55 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
24.03.2026.

**2026 மார்ச் மாதம் 24– ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 108/2024**

| | | | |
|---|---|---|---|
| O.S. No.: 108/2024 | – அசோகன் த/பெ.பொன்னுத்தேவர் | PW3 | 24.03.2026 |

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலம் வாதிகள் சொன்னதின்படி தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அல்லிநகரத்தில் பஜார் தெருவில் வாழைப்பழ விற்பனை கடை வைத்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து அல்லிநகரம்–பெரியகுளம் ரோடு, நேருஜி ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதியின் தந்தை வீராச்சாமி பிரதிவாதிக்கு உயில் சாசனம் எழுதிவைத்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. இந்த வழக்கின் 1, 2 வாதிகளின் தந்தை ராஜாராம் ஆசிரியராக பணிபுரிந்து, போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி குடும்பத்தை சரிவர கவனிக்காமல் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் பிரதிவாதி ராஜாராமிற்கு உதவிகள் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் கதவு எண், வீட்டு வரி எண், நான்கு மால் தெரியுமா என்றால் நான்குமால் தெரியும், வடக்கே சந்தானம் வீடு, தெற்கே சந்தானம் வீடு, கிழக்கே பிரதான சாலை, மேற்கே சந்து ஆகும்.

3. உண்மையில் எனக்கு நான்குமால் தெரியாது என்றாலும், வாதி சொல்லிக்கொடுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதன்படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 24.03.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.25 17:35:01 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
24.03.2026.